# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 10 புதன்கிழமை 26-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 339


# புளியங்குளம் அருகே 'பெல்' ஹெலி நள்ளிரவில் வீழ்ந்து நொறுங்கியது!

## இரு விமானிகள், இரு படையினர் பலி

வவுனியா, நவம்பர் 26

ஸ்ரீலங்கா விமானப் படையின் 'பெல் 212' ரக ஹெலிக்கொப்டர் ஒன்று புளியங்குளத்துக்கு கிழக்கே ஆறு கிலோ மீற்றர் தொலைவில் நயினாமடுப்பகுதியில் நேற்று அதிகாலை 12.20 மணிக்கு வீழ்ந்து நொறுங்கியது.

அச்சமயம் விமானத்தில் இருந்த இரு விமானிகளும், இரு சுடுபடைச் சிப்பாய்களும் (Gunners) உயிரிழந்தனர்.

நயினாமடு, மதியாமடுப் பகுதிகளில் உள்ள படையினர் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல்கள் நடத்தியதாகக் கூறப்படுகின்றது.

இத்தாக்குதல்களில் காயமடைந்த படையினரை ஏற்றிச் செல்வதற்காக அநுராதபுரம் படைத்தளத்திலிருந்து ஹெலிக்கொப்டர்கள் அழைக்கப்பட்டன.

'பெல் 212' ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் 'எம். ஐ-17' ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் திங்கள் நள்ளிரவு 11. 50 மணிக்கு அநுராத

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சிக் காலம் நேற்று ஆரம்பமானது

வவுனியா, நவ. 26

தமிழீழ விடுதலைப் புலிகளின் மாவீரர் எழுச்சி நாள் நேற்றுக் காலை 8 மணிக்கு கொடியேற்றத்துடன் உணர்வு பூர்வமாக ஆரம்பமானது என்று 'புலிகளின் குரல்' தெரிவித்தது.

வன்னியில் மாவீரர் பணிமனைகள், பொது இடங்கள், பாடசாலைகள் அரச அலுவலகங்கள் ஆகியவற்றில் நேற்றுக் காலை 8 மணிக்கு கொடியேற்றுவைபவம் இடம்பெற்றதாகவும் —

இன்று பகல் ஆசி வேண்டி பல ஆலயங்களில் வழிபாடுகள் இடம்பெறும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாவீரர் நாள் நாளையாகும்.

(உ-3-164)

## விமானப்படைக்கு மேலும் பின்னடைவு!

கொழும்பு, நவ. 26

நேற்று ஹெலி வீழ்ந்து நொறுங்கியது விமானப் படைக்கு மேலும் ஒரு பின் அடைவு என இராணுவ விமர்சகர்கள் குறிப்பிட்டனர்.

மூன்றாவது ஈழப் போரில் விமானப்படை இழந்த இருபத்திரண்டாவது விமானக் கலம் இதுவாகும். இருவார காலத்துக்குள் விமானப் படை இழந்த இரண்டாவது ஹெலியும் இதுவாகும்.

இந்த ''பெல் 212'' ரக ஹெலி சுமார் பன்னிரண்டு கோடி ரூபா மதிப்புடையது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## இந்த வாரம் 700 பேர் கப்பலில் திருமலைக்கு!

யாழ்ப்பாணம், நவ. 26

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு வார இறுதியில் பயணிகள் கப்பல் சேவை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதால், கப்பலில் பயணம் செய்பவர்களுக்கான பதிவுகள் இன்று முதல் மேற்கொள்ளப்படும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் தமது பெயர்களைப் பதிந்து பயணம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி. சீ. ஈ. (சா. த.) பரீட்சை: விடைத்தாள் திருத்தும் பணி மீண்டும் யாழ்ப்பாணத்தில்!

எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ (சாதாரண) பரீட்சை விடைத்தாள் திருத்தும் நிலையம் யாழ். வேம்படி மகளிர் கல்லூரியிலும் அமையவிருக்கிறது.

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்தில் இந்த நிலையம் அமைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது.

இந்தப் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் வேலைகள் இலங்கை முழுவதிலும் மொத்தம் 79 நிலையங்களில் எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 11 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கின்றன.

(உ-3)

## கடற்படையினருடன் நடந்த மோதலில் காயமடைந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர் பலி

யாழ்ப்பாணம், நவ. 26

கடந்த சனியன்று மாலை ஊர்காவற்றுறை துறையில் கடற்படையினருடன் நடந்த மோதலில் படுகாயமடைந்த ஈ. பி. டி. பி. உறுப்பினர் ஆதம்பிள்ளை அஸ்வத் (அனுஷின்) நேற்று நண்பகல் கொழும்பில் காலமானார். முஸ்லிமான இவர் அட்டாளைச்சேனையைச் சேர்ந்தவராவார்.

இவரின் ஜனாஸா இன்று காலை முதல் நண்பகல் வரை ஈ. பி. டி. பியின் யாழ். அலுவலகத்தில் மக்களின் அஞ்சலிக்கு வைக்கப்படும். பின்னர் யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிவாசல் ஒன்றுக்கு சமயக்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலையின் இரு மாணவர் கைது!

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் கடந்த சனிக்கிழமை படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுவதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை சுதுமலைப் பகுதியில் சுற்றிவளைப்பின் போது இவர்கள் கைது செய்யப்பட்டதாகவும் —

ஒருவர் நுண்கலைத் துறையையும் மற்றவர் வர்த்தகத் துறையையும் சேர்ந்தவர்கள் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

இவர்களை விடுவிக்கயாழ். பல்கலைக்கழக நிர்வாகம் படை அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(உ-3)

## கொக்குவிலிலும், சாவகச்சேரியிலும் நேற்று சுற்றிவளைப்புத் தேடுதல்

யாழ்ப்பாணம், நவ. 26

சாவகச்சேரி மற்றும் கொக்குவில் பகுதிகள் நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டன.

சாவகச்சேரி நகரப்பகுதி நேற்றுக் காலை 9.00 மணிக்கு சுற்றி வளைக்கப்பட்டது.

நகரப்பகுதியிலுள்ள அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள், சந்தை ஆகியன மூடப்பட்டுக் கிடந்தன.

அரச ஊழியர்கள், வர்த்தகர்கள், கடைச்சிப்பந்திகள், பொதுமக்கள், சந்தை வியாபாரிகள் ஆகியோர் சாவகச்சேரி [illegible] அழைக்கப்பட்டனர்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கிரனேட் வீச்சு!

வவுனியா, நவ. 26

வவுனியா காமினி வித்தியாலயத்துக்கு அண்மித்த பகுதியில் நேற்று முன்னிரவு 7 30 மணியளவில் கிரனேட் வீச்சுச் சம்பவம் ஒன்று இடம் பெற்றதாகத் தெரியவருகின்றது. இச்சம்பவத்தில் படையினர் ஒருவர் காயமடைந்தார்; ஜீப் ஒன்று சேதமுற்றது; கிரனேட்டுடன் ஒருவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்தவரை ஏற்றிச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## படகுகள் கடத்தப்பட்டன

கொழும்பு, நவ. 26

திருகோணமலை உப்பாறு கரையோரத்தில் மீனவர்களைத் தாக்கி விட்டு ஆறு படகுகளை இனந்தெரியாதோர் கடத்திச் சென்றதாகவும் —

சல்லிப் பிரதேசத்தில் படகொன்றின் இயந்திரம் களவாடப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

## சிப்பாய் பலி!

கொழும்பு, நவ. 26

திருகோணமலை மாவட்டம் பங்கிரிகஸ் வெவ என்ற இடத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.15 மணியளவில் ரோந்து சென்ற இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே மோதல் இடம்பெற்றது. இம் மோதலில் இராணுவச் சிப்பாய் ஒருவர் உயிரிழந்ததாக பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமைச் செயலகம் தெரிவித்தது.

(உ-5)

## தாழங்குடாவில் தேடுதல்

மட்டக்களப்புக்கு தெற்கே கல்முனைப் பாதையில் சுமார் ஆறு மைல் தொலைவிலுள்ள தாழங்குடாப் பகுதி நேற்றுக் காலை படையினரால் சுற்றி வளைக்கப்பட்டது; தேடுதல் நடத்தப்பட்டது.

தேடுதலின் போது கைது செய்யப்பட்ட இருவர் நையப் புடைக்கப்பட்ட பின்னர் கூட்டிச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

(இ)

## எல்லை மீறிப் பாயும் இரணைமடு

வன்னிப் பெருநிலப்பரப்பில் தொடரும் மழையால் நிரம்பியுள்ள இரணைமடுக் குளத்தின் வான் நேற்று திறந்து விடப்பட்டது.

இதன் காரணமாக வன்னியின் கிழக்கு - மேற்குக்கு இடையேயான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயாவிளான்
**மத்திய மகாவித்தியாலயம்**
**ஆண்டு 6 அனுமதி**

விண்ணப்பமுடிவு 5-12-97 விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

(51414) **அதிபர்**

# தவறிவிட்டது

நேசமலர் கிருபைராஜா என்பவரது தேசிய அடையாள அட்டை (475881247 V), விசேட அடையாள அட்டை, புதிய கைக்கடிகாரம், பணம் 32,411/- (இப்பணம் சிறுவர் இல்லப் பராமரிப்புக்குரியது) என்பன கலட்டி தடைமுகாமிற்கும், ஆனைக்கோட்டை கூழாவடிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ''மக்லியோட் வைத்திய சாலை' இணுவிலில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

**நம்பிக்கை இல்லம்,**
**இணுவில்.** (51412)

# மரண அறிவித்தல்கள்

## நாகமணி அன்னம்மா

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த நாகமணி அன்னம்மா 23-11-97 இல் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் 26-11-97 இன்று புதன்கிழமை 3-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. சிவானந்தம் (மகன்)
(மெக்கானிக்)
பொன்னுச்சாமி வீதி,
சாவகச்சேரி. (51407)

## கணபதிப்பிள்ளை ஜெயயோகன்

சுழிபுரம் மேற்கைப் பிறப்பிடமாகவும், தற்போது பிரான்ஸில் வசிப்பவருமாகிய கணபதிப்பிள்ளை ஜெயயோகன் 21-11-97 இல் சிவபதமடைந்து விட்டார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, முத்தாச்சியின் மகனும், கலாராணியின் கணவரும், அருண், அனுசா ஆகியோரின் தந்தையும், சுவாமிநாதன், தேவநாயகி, கமலநாயகி, கெங்கா, கடம்பு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வீமதேவன்
சுழிபுரம், (51406)

## இராமலிங்கம் சர்வானந்தன்

(இளைப்பாறிய பிரதம சுகாதார பரிசோதகர், யாழ்ப்பாண மாவட்டம்)

சுன்னாகத்தைச் சேர்ந்த இராமலிங்கம் சர்வானந்தன் 20-11-97 வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 26-11-97 புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. ருக்குமணி
(சகோதரி)
முதலியார் வளவு,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம். (51413)

## கைதடி
## சுப்பையா சபாரத்தினம் ஐயா

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கைதடியை வதிவிடமாகவும் கொண்ட சுப்பையா சபாரத்தினம் ஐயா 24-11-97 திங்கள் மாலை சிவபதம் அடைந்தார்.

உரும்பிராய் சுப்பையா - இளையபிள்ளை தம்பதியரின் அருமைப் புத்திரனும், சோமசுந்தரம், அப்பாத்துரை, அன்னம்மா, கண்மணி, பொன்னம்மா, சரஸ்வதி (கனடா), தியாகராசா, பூபதி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், தெய்வநாயகியின் (தங்கம்) பிரிய கணவரும், கண்மணிதேவி, தேவராசா, பவளம், சேனாதிராசா, சிவராசா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

சமாதிக் கிரியைகள் நேற்று [25-11-97] செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைதடியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரையும் வேண்டுகின்றோம்.

குடும்பசார்பில்
ச. தேவராசா
கைதடி. [51410] (மகன்)

## ஆசிரியர் சம்பளம்

யாழ். கல்வி வலயம் -1 பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கான இம்மாத சம்பளம் நேற்று முன்தினம் வழங்கப்பட்டது.

சம்பளம் வழங்குவதற்கான கட்டு நிதி நேற்று முன்தினம் சகல கோட்டங்களுக்கும் வழங்கப்பட்டது. (ஐ-51)

## விவசாயிகளுக்கு யூரியா

அச்சுவேலி நவ. 26

புத்தூர் கமநல சேவைப் பிராந்தியத்தில் உள்ள பயிர்ச் செய்கையாளர்களுக்கு விவசாய சம்மேளனங்களின்சிபார்சின் அடிப்படையில் யூரியா உரம் வழங்கப்படுகின்றது. (இ-11)

## இராஜ கோபுரம்

யாழ்ப்பாணம், நவ.26

திருநெல்வேலி அருள்மிகுஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்திற்கு பல இலட்சம் ரூபா செலவில் இராஜகோபுரம் அமைக்கும் வேலைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன,

இரண்டு மணிக்கூண்டுக் கோபுரங்களுடன் கூடிய இந் இராஜகோபுரம் ஆகம விதிகளுக்கு அமைந்த பலவேறு விக்கிரங்ககளைக் கொண்டதாக அமைக்கப்பட்டு வருகிறது.

இராஜகோபுரத் திருப்பணியை அம்பாளின் அடியவர் ஒருவர் தனி உபயமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில் திருட்டு

அரியாலை, நவ. 26

வீடு ஒன்றுக்குள் புகுந்த திருடர் கோஷ்டி பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் களவாடிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நல்லூர்ப்பகுதியில் நேற்று முன்தினமிரவு இடம் பெற்றது.

இரவு ஒன்பது மணியளவில் வீட்டுக்குள் புகுந்து அங்கே இருந்தவர்களை இவர்கள் தாக்கினர் என்றும்—

பின்னர் வெள்ளை நிறத் தூளை கண்களில் வீசியதால் வீட்டுக்காரர் மயக்கமடைந்து விட்டனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

வீட்டுக்காரர் மயங்கிய நிலையில் இருந்த சமயம் பார்த்து நகைகள் மற்றும் பணம், சைக்கிள் போன்றவற்றைத்திருடர்கள் எடுத்துச் சென்றுவிட்டனர். (இ-17)

## பிரிவுபசார வைபவமும் வரவேற்பும்

திருநெல்வேலி, நவ. 26

வேலணை அரசினர் வைத்தியசாலையில் 10 வருட காலம் பொறுப்பதிகாரியாக கடமையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள டாக்டர் ஆ. திருநாவுக்கரசுக்கு பிரிவு உபசாரமும் —

புதிதாகக் கடமையேற்றுள்ள டாக்டர் எஸ். பரராஜசிங்கத்துக்கு வரவேற்பும் — நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை அரசினர் வைத்தியசாலையில் நடைபெறவுள்ளன.

வேலணை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சபையினால் இந்த வைபவம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. (இ-135)

## இலவசப் பயிற்சி

அச்சுவேலி, நவ. 26

வலிகிழக்குவடபகுதி (அச்சுவேலி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் மகளிருக்கான சமூகநல, சுயதொழில் பயிற்சி நெறியை இலவசமாக வழங்கிவருகின்றது.

சிகை அலங்காரம், பூவேலை தையல், ஐசிங், கதிரை பின்னல் தொப்பி தைத்தல், கோழிவளர்ப்பு, தாம்பூ மேலை, வீட்டுத் தோட்டம், கோலம் அமைத்தல் ஆகியவற்றிலே பயிற்சி அளிக்கப்படுகின்றது. (இ-11)

# உப்பள ஊழியர் சங்கம் மீண்டும் இயங்குகிறது

யாழ்ப்பாணம், நவ. 26

வடபிராந்திய உப்பள ஊழியர் சேவை நலச் சங்கம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது.

1993 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம்95ஆம் ஆண்டு முதல் செயற்படாமல் இருந்தது.

ஊழியர்கள் பலரது அயராத முயற்சியால் அது மீண்டும் தற்போது செயற்பட ஆரம்பித்துள்ளது.

கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு செய்யப்பட்டு உசனில் செயற்பட ஆரம்பமாகி உள்ளது.

உப்பள ஊழியர்கள் பிரதி சனிக்கிழமை தோறும் சங்கச் செயலாளரை காலை 10 மணி தொடக்கம் 2 மணி வரை சந்தித்து தமது பிரச்சினைகளைத் தெரிவிக்க ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-9-117-ரீ)

## அகதிகள் வருகை

வன்னியில் இருந்து குடாக் கடலூடாக வள்ளங்களில் 45 அகதிகள் கடந்த திங்கட்கிழமை குருநகர் இறங்குதுறைக்கு வந்திறங்கினர். இவர்கள் குருநகர் சீநோர் வலைத்தொழிற்சாலை அகதி முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (உ-51)

## வாழைப்பழம் விலை வீழ்ச்சி

வாழைப்பழத்தின் விலை மேலும் வீழ்ச்சியடைந்துள்ளது. இப்போது கிலோ 10 ரூபாவாக வழைப்பழம் விற்பனை செய்யப்படுகிறது.

# வாழ்த்துகின்றோம்

18 வயதுக்கு உட்பட்ட பிரிவில்
கோட்ட சம்பியனாகவும்,
16 வயதுக்கு உட்பட்ட பிரிவில்
கோட்ட வலய சம்பியனாகவும்
தெரிவுசெய்யப்பட்ட

**யாழ். சென். ஜேம்ஸ் ம.வி.**

உதைபந்தாட்ட அணிகளையும்,
அவற்றைப் பயிற்றுவித்த அதிபர், ஆசிரியர்களையும்
பாராட்டுகின்றோம்.

**குருநகர்**
**பாடும்மீன் விளையாட்டுக் கழகம்**
(சி/2179)

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் சங்கீத ஆசிரியரும்
உப அதிபருமாகிய
**திருமதி கெள. கணேசலிங்கத்தின்**
தந்தையார்
**அமரர் இ. குமாரசாமி J.P.**

அவர்களின் மறைவையொட்டி துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பெற்றோர், பழைய மாணவர்கள்.
யா / ஆனைக்கோட்டை
பாலசுப்பிரமணிய வித்தியாலயம். (51409)

# கண்ணீர் அஞ்சலி

**சுப்பையா சபாரத்தினம் ஐயா**

கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிரு கந்தசுவாமி கோயிலின் சாத்துப்படியாளர் சுப்பையா சபாரத்தினம் ஐயாவின் மறைவையொட்டி எமது அஞ்சலியைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியுறும் வண்ணம் திருமுருகன் திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்.

பரிபாலன சபையினர்,
**இணுங்கித் தோட்டம்,**
**கந்தசுவாமி கோயில், கைதடி.**
(51411)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

**யா/ யூனியன் கல்லூரி**
வர்த்தக ஆசிரியை
**செல்வி ஜெனிரா சின்னையா**
அவர்களின் அன்புத் தாயார்
**திருமதி அன்னம்மா சின்னையா**

அவர்களின் மறைவையிட்டு அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் எமது இதய அஞ்சலியையும் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடையவும் பிரார்த்திக்கின்றோம்.

1996 வர்த்தகப் பிரிவு மாணவர்கள்
**யா/ யூனியன் கல்லூரி**
(51415)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்
நல்லூர் ... நூலகம்

# அரசுக்குச் சமர்ப்பிக்க முன்னரே ஜெயின் அறிக்கை கசிந்தது எப்படி?

## சி. பி. ஐ. வழக்குப் பதிவு

புதுடில்லி, நவ. 26

அரசுக்குச் சமர்ப்பிக்க முன்னரே ஜெயின் கமிஷன் அறிக்கை பத்திரிகைகளில் வெளியானது குறித்து விசாரிப்பதற்காக சி. பி.ஐ. வழக்குப் பதிவு செய்துள்ளது.

அறிக்கை அம்பலமானது குறித்து விசாரணை நடத்தப்படும் என்றுமத்திய உள்துறை அமைச்சர் இந்திரஜித் குப்தா நாடாளுமன்றில் ஏற்கனவே கூறியிருந்தார்.

அறிக்கையை நீதிபதி ஜெயினே வெளியிட்டிருக்கலாம் என்றும் அவர் தெரிவித்திருந்தார். (இ-9)

# ஈராக்கின் நாசகார ஆயுதங்கள் ஜனாதிபதியின் மாளிகைக்குள்?

ஐ. நா. நவ. 26

ஐ. நா. ஆயுதப் பரிசோதனைக் குழு உறுப்பினர்கள் ஈராக்கில் பல இடங்களில் பரிசோதனைகளை நடத்தியுள்ளனர்.

ஆனால் முக்கியமான சில அழிவாயுதங்களும் அவை குறித்த சில இரகசியங்களும் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேய்னின் மாளிகைகளுக்குள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாகச் சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

எனவே அந்த மாளிகைகளும் சோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்துகின்றது.

ஆனால் தேசிய பாதுகாப்பு சம்பந்தப்பட்ட முக்கிய இடங்களில் எவரையும் அனுமதிப்பதில்லை என ஈராக் அறிவித்துள்ளது. (இ-9)

# ஸ்ரீ நகரில் ஒருவர் சுட்டுக்கொலை

காஷ்மீரில் ஸ்ரீநகருக்குத் தெற்கிலுள்ள அனந்நால் என்ற இடத்தில் உள்ளூர் பத்திரிகையில் பணிபுரிந்த ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அடையாளம் தெரியாத ஒருவர் இவரைக் கடத்திச் சென்று கொலை செய்தார் என்று கூறப்படுகிறது.

உலக அரங்கில்

# ஐ. நா. அதிகாரிகள் சோமாலியாவில் விடுதலை

மொகடிஸ், நவ. 26

வடகிழக்கு சோமாலியாவில் போராளிகளால் கடத்திச் செல்லப்பட்ட ஐ. நா. உதவி அதிகாரிகள் ஐவரும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நல்ல உடல் நலத்துடன் இருப்பதாக ஐ. நா. சபை அறிவித்துள்ளது.

விடுதலை செய்யப்பட்டவர்களில் பிரிட்டனைச் சேர்ந்த டெனிஸ் கசிரியேயும் ஒருவர் இவர் ஐரோப்பிய உதவி அமைப்புக்களில் பணிபுரிந்தவர்.

விடுவிக்கப்பட்ட ஏனையோரில் ஒருவர். இந்தியர். மற்றவர் கனேடியர். ஏனைய இருவரும் கென்னியாவைச் சேர்ந்தவர்கள். (இ-9)

# அட்லாண்டிக் சமுத்திரத்தில் பனாமாக் கப்பல் மூழ்கியது

சென்னை, நவ. 16

பனாமாவில் பதிவு செய்யப்பட்ட சரக்குக் கப்பல் ஒன்று மோசமான காலநிலை காரணமாக அட்லாண்டிக் கடலில் மூழ்கியது.

37 ஆயிரம் தொன் எடை கொண்ட எம். எஸ். சீ. கார்லா என்ற அந்தக் கப்பல் பிரான்ஸில் உள்ள லீகாராரேயில் இருந்து போஸ்ரனுக்குச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து ஏற்பட்டது.

கப்பல் மூழ்கிய சமயம் கப்பலில் 34 பேர் இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்களது நிலைமை பற்றி தகவல் எதுவும் இல்லை.

# பிரேமானந்தாவின் அப்பீல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரிக்கும்

சென்னை, நவ. 26

சுவாமி பிரேமானந்தாவும் மற்றும் 5 பேரும் தமக்கு விதிக்கப்பட்ட சிறைத்தண்டனைகளுக்கு எதிராக தாக்கல் செய்த அப்பீல் மனுவை சென்னை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுள்ளது.

சுவாமி பிரேமானந்தாமீது கற்பழிப்பு, மற்றும் கொலைக் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு, புதுக்கோட்டை செஷன்ஸ் நீதிமன்றினால் இரட்டை ஆயுள் தண்டனையும், 66 லட்சத்து 2 ஆயிரம் ரூபா அபராதமும் கடந்த ஒகஸ்ட் மாதம் விதிக்கப்பட்டிருந்தது.

திருச்சிக்கு அருகேயுள்ள ஆசிரமத்தைச் சேர்ந்த கமலானந்தா, பாலன் என்ற பாலேந்திரன், மயில்வாகனம், நந்தகுமார், சதீஷ் குமார் ஆகியோருக்கும் இந்த வழக்கில் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.

சந்திராதேவி என்பவருக்கும் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் ஏற்கனவே சிறைத் தண்டனையை அனுபவித்து விட்டு சிறையிலிருந்து வெளியேறி விட்டார்.

அப்பீல் மனுவில் இவர்களால் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;-

புதுக்கோட்டைசெஷன்ஸ் நீதிபதி நீதி, சமநிலையை மறந்து தமது தீர்ப்பை வழங்கியிருக்கிறார்.

சாட்சியங்களின் உண்மை நிலையை அவர் கருத்திற் கொள்ளவே இல்லை. தடயங்களின் தன்மைகளையும், வழக்கில் கூறப்பட்டுள்ள சாட்சியங்களின் தன்மைகளையும், அவர் சட்டப்படி நிர்ணயிக்கத் தவறி விட்டார். அவரது தீர்ப்பு சட்ட அறியாமையைக் காட்டுகிறது. தடயங்களின் நிலைகள் குறித்து சரியாக தீர்மானிக்க அவர் எந்த முயற்சியும் எடுத்துக் கொள்ளவில்லை. வழக்கு விசாரணை முழுவதையும் அவர் ஒருதலைப்பட்சமாகவே நடந்திருக்கிறார். இதனால் நாங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளோம். எனவே தீர்ப்பை ரத்துச் செய்து எங்களை விடுதலை செய்ய வேண்டும்.

இவ்வாறு அப்பீல் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இந்த அப்பீல் வழக்கு நீதிபதிகள் சி. சிவப்பா, எஸ் தங்கராஜ் ஆகியோர் முன்பாக விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்கள் சார்பில் சிரேட்ட வழக்கறிஞர் கே. அ. சோகன் வாதாடினார். சுவாமி பிரேமானந்தாவுக்கு விதிக்கப்பட்ட அபராதத்தை நிறுத்தி வைக்கக் கோரி ஒரு மனுவையும் தாக்கல் செய்து அவர் வாதாடினார்.

அப்பீல் வழக்கை விசாரணைக்கு ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் இது தொடர்பாக பொலீஸாருக்கு நோட்டீஸ் அனுப்ப உத்தர விட்டனர்.

அபராதத்தை நிறுத்தக் கோரும் மனுதொடர்பாகவும் பொலீஸாருக்கு நோட்டீஸ் அனுப்ப நீதிபதிகள் உத்தர விட்டனர்,

இம்மனு விசாரணையை அடுத்த மாதம் 9 ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்தனர். (இ-9)

# வின்னி மண்டேலா மீது கொலைக் குற்றச்சாட்டு

லண்டன், நவ. 26

தற்போது பிரிந்து வாழும் தென் ஆபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் மனைவி வின்னி மண்டேலா உண்மைக்கும் நல்லிணக்கத்துக்குமான ஆணைக்குழு முன் தோன்றுமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

தென் ஆபிரிக்காவில் வெள்ளையர் ஆட்சிக்கு எதிரான போராட்டக் காலத்தில் சில கொலைகளுக்குக் காரணமாக இருந்தார் என்று அவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

1989 இல் கடந்த 14 வயது ஸ்ரெம்பி செபி என்ற சிறுவனின் கொலையில் இவருக்குச் சம்பந்தம் உள்ளதெனக் கூறப்படுகின்றது.

இது தவிர வின்னி மண்டேலா ஒரு கெரில்லாத் தலைவரைக் கொன்றார் என்ற குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டுள்ளது.

வின்னி மண்டேலாவுக்கு எதிராக 40 சாட்சிகள் உள்ளன. இவர்களில் சமுதாயத்தில் பெரு மதிப்பிலுள்ள பலரும் அடங்குவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

# தி. மு. க. இல்லாத அரசே காங்கிரஸின் நோக்கம்

## மூப்பனாருடன் தூதுக்குழு பேச்சு

புதுடில்லி, நவ. 26

தி. மு. க. இல்லாத ஐக்கிய முன்னணியும் காங்கிரஸும் இணைந்து மாற்று அரசு அமைப்பதற்கான சாத்தியக் கூறு குறித்து பரிசீலனை செய்ய வேண்டும் என்றும் —

நாடாளுமன்றம் கலைக்கப்படுவதை தவிர்க்க வேண்டும் என்றும் — வலியுறுத்துவதற்காக தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் மூப்பனாரை ஏழு உறுப்பினர்களைக் கொண்ட காங்கிரஸ் எம்பிக்கள் குழு நேற்று முன்தினம் சந்தித்தது.

இக்குழு மூப்பனாருடன் 30 நிமிடம் பேச்சு நடத்தியது (இ-9)

# கடவுச்சீட்டு விண்ணப்பம் பிரதேச செயலகத்தில் ஏற்பு

நெல்லியடி நவ. 26

கரவெட்டி பிரதேச செயலகத்தில் கடவுச்சீட்டு பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

கடவுச் சீட்டைப் பெற விரும்புவோர் அதற்குரிய விண்ணப்பப் படிவத்தை பிரதேச செயலகத்தில் பெற்று, அதனைப்பூர்த்தி செய்து ஒப்படைக்க வேண்டுமென்றும் —

மாதாந்தம் சேகரிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் யாழ். செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் — கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் தெரிவித்தார். (இ-109)

## நிவாரணம்

நெல்லியடி, நவ. 26

வடமராட்சி கிழக்கில் இடம்பெயர்ந்தவர்களுக்கான 49 ஏ பி புள்ளிக்கான நிவாரணம் தற்பொழுது மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் வழங்கப்பட்டு வருகின்றது, (இ-109)

# மருத்துவ சேவையாளர் பற்றாக்குறை

அச்சுவேலி, நவ. 26

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலையில் குடும்பநல மருத்துவ சேவையாளர்களுக்கு பற்றாக்குறை நிலவி வருகிறது.

இரண்டு குடும்பநல மருத்துவ சேவையாளர்கள் கடமையாற்ற வேண்டிய இடத்தில் ஒருவர் மட்டுமே கடமையாற்றுகிறார். இதனால் கர்ப்பிணித் தாய்மார்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று கூறப்படுகின்றது. (இ-11)

# பங்கீட்டுக்கு மண்எண்ணெய்

நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் பங்கீட்டு அட்டைக்கு 3 லீற்றர் மண்எண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

இது நவம்பர் மாதக் கடைசி இரு வாரங்களுக்கு உரியதாகும்.

இதே நேரத்தில் குடும்பம் ஒன்றுக்கு 10 லீற்றர் மண்எண்ணெயை மேலதிகமாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும் போதியளவு கையிருப்பு இல்லாததால் அது [illegible] ளது. [இ-154]

# தராசுப் படிகளுக்கு முத்திரை

அச்சுவேலிபிரதேசசபைஉப அலுவலகத்தில் நாளை வியாழக்கிழமையும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 1-30 மணிவரை தராசுப்படிகளுக்கு முத்திரையிடப்படும். (இ-30)

**கண்ணீர் அஞ்சலி**

சமூகத் தொண்டரும் ஓய்வு பெற்றவருமாகிய

**இராமலிங்கம் சர்வானந்தன்**

அவர்கள் இறைபதம் எய்தியமையை இட்டு அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்
யா/ சுன்னாகம்
மயிலணி சைவ மகாவித்தியாலயம்.

(51408)

**மொழி பெயர்ப்பாளர்**

மொழி பெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

55 வயதுக்கு உட்பட்டவர்களும் ஆகக் குறைந்தது ஐந்து வருட கால மொழிபெயர்ப்பாளர் அனுபவம் உடையவர்களும் விண்ணப்பிக்கலாம்.

ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளில் இருந்தும் தமிழுக்கு, கருத்துத் தெளிவுடனும், பத்திரிகைக்கு உரிய நடையிலும் மொழி பெயர்ப்பதில் அனுபவம் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே பரிசீலனைக்கு எடுக்கப்படும்.

பத்திரிகை அலுவலகங்களில் மொழிபெயர்ப்பாளர்களாகப் பணிபுரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தமிழில் இருந்து ஆங்கிலத்துக்கு மொழி பெயர்ப்புச் செய்யும் திறமை உடையோர் விரும்பப்படுவர்.

இரவுப் பணியும் ஆற்றவேண்டும் என்பதால் விண்ணப்பதாரர்கள் யாழ். நகரப் பகுதியில் வசிக்க வேண்டும்.

கல்வித் தகுதி, தொழில் அனுபவம் உட்பட்ட சுய விவரங்கள் கொண்ட விண்ணப்பங்கள் கிடைக்க வேண்டிய இறுதித் திகதி **05—12—1997** ஆகும்.

பிரதம ஆசிரியர்,
**உதயன் - சஞ்சீவி,**
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**உடன் விற்பனை**

பிறிமா புறோயிலர் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. 29 - 11 - 97 சனிக்கிழமை பிறிமா பிறவுண் வெள்ளை பேட்டுக்குஞ்சுகள், சேவல் குஞ்சுகள், பிறிமா புறோயிலர் குஞ்சுகள் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (51383)

**தவறிவிட்டது**

இராசா குணரத்தினம் என்பவருடைய விசேட அடையாள அட்டை உடுவிலுக்கும் சண்டிலிப்பாய்க்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ரஞ்சன் கடை, சங்கானை என்னும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [49853]

மா.சண்முகராஜா,(39மலர் மகள் வீதி, அரியாலை) என்பவருடைய விசேட அடையாளஅட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ஆரியகுளம் சந்தி, நாகவிகாரைக்கு முன்பாக ஸ்ரான்லி வீதியில் ராஜன் பின்னலகத்தில் தயவுசெய்து ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [51388]

**கணக்குப் பதிவாளர்**

தொழில் ஸ்தாபன, வியாபார ஸ்தாபன கணக்குகள் தேவைக்கேற்ப எழுதிக் கொடுக்கப்படும். தொடர்பு: இல: 665, C/O ''உதயன்'' யாழ்ப்பாணம். [51246]

**மணமகன் தேவை**

இந்துசைவ கௌரவகுடும்பத்தில்1973-ம்ஆண்டுபிறந்த நடசத்திரம் மகம் உதயத்தில் செவ்வாய் உள்ள உயர் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் தமது மகளுக்கு ஏற்ற வரனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இராஜேஸ்வரி பல பொருள் வாணிபம்,கோட்டடி, சாவகச்சேரி. [சி/2170]

**வீடு வாடகைக்கு**

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சுமார் 2000, ச. அடியில் அமைந்துள்ள பெரிய வீடு அலுவலக வெளிநாட்டு நிறுவன பாவனைக்கு வாடகைக்கு விடப்படும் தொடர்பு இல.668,C/o ''உதயன் பணிமனை'' யாழ்ப்பாணம். [51385]

**மணமகள் தேவை**

இந்து சைவ கௌரவகுடும்பத்தில் 1969 ஆம் ஆண்டு பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள (கிரகபாவம் 10) கனடாவில் தொழில் புரியும் தமது மகனுக்கு உள்நாட்டிலோ, அன்றி வெளிநாட்டிலோ படித்த அழகான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இராஜேஸ்வரி, பல்பொருள்வாணிபம்,கோட்டடி, சாவகச்சேரி. [சி/2172]

**இறைச்சிக் கோழி**

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. S K. கோழிப்பண்ணை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம். [51283]

**SPOKEN ENGLISH**

சுலபமாக ஆங்கிலம் கதைக்கப் பயில (வயது, அறிவுக்கு ஏற்ப வகுப்பு, வேலை பார்ப்பவர்க்கும்) ஆசிரியர் :ந.விக்கினேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன்துறை வீதி, வண்ணை சிவன் சந்தி, யாழ்ப்பாணம். (51399)

## கண்ணீர் அஞ்சலி

சங்கானைக் கல்விக் கோட்டப் பணிப்பாளர்
**திரு. A. V. கணேசலிங்கம்**
அவர்களின் மாமனார்
**இளையதம்பி குமாரசாமி J. P,**
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினர் அனைவருக்கும் எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர் நலன்புரிச்சங்கம்,
**சங்கானைக் கல்விக் கோட்டம்.**

(51394)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 1930 — 09 — 29 | 1997 — 10 — 13 |

### அமரர் ஆறுமுகம் கதிரமலை (பத்தர்)

26 - 11 - 97 புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன விருந்து வைபவத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,

க. மோகனராஜா (மகன்),
பூநகரி லேன்,
கொக்குவில். (51347)

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### பண்டிதர் சதாசிவம் பொன்னுத்துரை

| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 03 — 03 — 1917 | 07 — 12 — 1996 |

திதி: 26 — 11 — 1997

பண்டிதராய் சைவப்புலவருமாய் அதிபருமாய்
கண்டிப்பும் அன்பும் நற்கருணையும் கொண்டவராய்
எண்திக்கும் புகழோங்க ஏற்றமுடன் வாழ்ந்திங்கே
அன்பிற்கும் அறிவிற்கும் உரியவராய் எமைவளர்த்து
பண்பிற்கு இலக்கணமாய் வழி நடத்தி ஆதரவும்
தந்திங்கே தரணிபோற்ற வாழவைத்து
சென்றெங்கே சேர்ந்தீர் எமைத்தவிக்கவிட்டிங்கே?

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி. (சி/2154)

## நன்றி கூறுகின்றோம்

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருந்த திரு. ந. இலட்சுமணகுமார் அவர்கள் இந்தியா சென்று சிறுநீரக மாற்று சிகிச்சை பெற்று சுகமாகியுள்ளார். எமது வேண்டுகோளுக்கிணங்க அவருடைய சத்திர சிக்சிசைக்கு பண உதவி புரிந்த தெல்லிப்பழை, சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில் கல்விக்கோட்ட கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள், துர்க்கா தேவஸ்தானம், இலங்கை வங்கி, சுன்னாகம், யாழ்ப்பாண வர்த்தகசங்கம், அளவெட்டி, ப. நோ. கூ. சங்கம், எமது கழகத்தின் அங்கத்தவர்களுக்கும், முன்னாள் காப்பாளருமாகிய திரு. அ. சிறிக்குமாரன் அவர்களுக்கும் எமது கழகத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**யா/ அருணோதயக் கல்லூரி,**
ஆசிரியர் கழகம்,
அளவெட்டி.

சி. இரத்தினசிங்கம் — தலைவர்
ந. செல்வராசா — செயலாளர்

(51395)

## பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்



### ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை
(செகராசாசிங்கம்)
(பாசஊர்)

இலங்கை இலக்கியப் பேரவையின் 1994 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த நாடக நூலாக பரிசு பெற்ற இம்மனுவல் நாட்டுக்கூத்தை எழுதிய பாசஊரைச் சேர்ந்த முத்தாரக் கவிஞர் செஞ்சொற்புலவர் ஆசீர்வாதம் தேவசகாயம்பிள்ளை (செகராசாசிங்கம்) அவர்களைப் பாராட்டுவதோடு அவரது ஏனைய படைப்புக்களும் பரிசு பெறுவனவாய் அமைய வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள் :
திரு. S. E. யோசவ்,
திருமதி யோ. செகஜோதி
செல்வி யோ. குலமகள்.

(51389)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 05 — 03 — 1931 | 06 — 12 — 1996 |

### அமரர் நாகலிங்கம் தேவராசா

திதி: 1997 . 11 . 26

இல்லத்தில் ஒளியேற்றி, இதயத்தால் அன்பு செய்து அரவணைத்த தெய்வம் நீங்கள்! எங்கள் உள்ளத்தைத் துயரில் ஆழ்த்தி உலகைத் துறந்தேன் சென்றீர்கள்?

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 26 - 11 - 97 இல் நடைபெறும் கிரியைகளிலும், மதிய போசனத்திலும் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

பெரிய தம்பிரான் வீதி,
வண்ணார் பண்ணை,
யாழ்ப்பாணம். [சி/2177]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ நடவடிக்கையின் போது

# வலி-கிழக்கு ப. நோ. கூ. சங்கத்துக்கு ஏற்பட்ட இழப்பு ரூ. 3கோடி 63லட்சம்

அச்சுவேலி, நவ. 26

வலி. கிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்குக கூட்டுறவுச் சங்கத்துக்கு இராணுவ நடவடிக்கைகளினால் ஏற்பட்ட இழப்பு 3 கோடி 63 இலட்சத்து 210 ரூபா 12 சதம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதலாம் திகதி வலிகாமத்தில் ஏற்பட்ட இழப்பு 2கோடி 75 இலட்சத்து 1349 ரூபா எனவும்—

1996ஆம் ஆண்டு ஏப்ரல் 19ஆம் திகதி தென்மராட்சியை நோக்கிய இராணுவ நடவடிக்கையின் போது ஏற்பட்ட இழப்பு 87இலட்சத்து 98 ஆயிரத்து 861 ரூபா 12 சதம் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இவற்றுள் கட்டடங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 1 கோடியே 18 லட்சத்து 84 ஆயிரத்து 209 ரூபா எனவும் —

காசுப் பொருள்களுக்கு ஏறபட்ட இழப்பு 94 லட்சத்து 12 ஆயிரத்து 89 ரூபா 96 சதம் எனவும்

தளபாட இணைப்புக்களுக்கு ஏற்பட்ட இழப்பு 43 லட்சத்து 42 ஆயிரத்து 312 ரூபா எனவும் —

மோட்டார் வாகனங்களுக்கு ஏற்பட்ட இழப்பு 4 லட்சத்து 14 ஆயிரம் ரூபா எனவும் —

ரொக்கப்பணம் மற்றும் காசோலை இழப்பு 13 லட்சத்து 39 ஆயிரத்து 439 ரூபா 56 சதம் எனவும் — மதிப்பிடப்பட்டுள்ளது.

(இ-11)

## கூட்டுறவுங் கல்வி பயிற்சிக் கருத்தரங்கு

நவாலி, நவ. 26

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டம் சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்கு தெல்லிப்பழை ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் சி.சிவமகாராசா தலைமையில் நடைபெற்றது.

கிளைக்குழு உறுப்பினர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபையின் மாவட்ட செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் ''கிளைக்குழு உறுப்பினர்களின் கடமையும் பொறுப்பும்'' என்ற தலைப்பிலும்—

கூட்டுறவுத் திணைக்கள அபிவிருத்தித் தலைவர் கா. கந்தசாமி ''கிளை அபிவிருத்திக்கு கிளை உறுப்பினர்களின் பங்களிப்பு'' என்ற தலைப்பிலும் கருத்தரங்கு நடத்தினார்கள்,

(இ-100)

## சனசமூக நிலையம்

அரியாலை, நவ. 26

அரியாலை திருமகள் சனசமூக நிலையம் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் மீண்டும் இயங்க ஆரம்பித்துள்ளது.

(இ-17)

## இடம் பெயர்வு கால சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம், நவ. 26

1995 ஒக்ரோபர் இடம் பெயர்வின் போது வெளியேறி மீண்டும் யாழ். குடாநாடு திரும்பிய தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையைச் சேர்ந்த ஆறு ஊழியர்களுக்கு இடம் பெயர்வுக் காலத்துக்கான சம்பளம் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது வாழ்க்கைச் செலவீனங்கள் அதிகரித்துள்ளதால் மேற்படி ஊழியர்களின் குடும்பங்கள் பல்வேறு இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ளன.

சம்பளத்தையும், விசேட கொடுப்பனவுகளையும் வழங்குவதில் நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபையைச் சேர்ந்த உயர் உத்தியோகத்தர்கள் பலர் எடுத்த முயற்சிகள் இது வரை வெற்றியளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-ரி)

## அனலைதீவு தண்ணீர்த் திட்டம் விரைவில் புனரமைக்கப்படும்

அனலைதீவுகுடிதண்ணீர்த் திடடம் விரைவில் புனரமைக்கப்படவுள்ளது.

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை இதற்கான நடவடிக்கைகளைமேற் கொள்ளும்.

தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச்சபை அதிகாரிகள் கடந்தவாம் நேரரடியாக அனலைதீவு சென்று குடிதண்ணீர்த் திட்டத்தைப் பார்வையிட்டனர்.

(இ-111)

## கிராம அபிவிருத்திச் சங்கங்கள் வடமராட்சி கிழக்கில்புனரமைப்பு

நெல்லியடி, நவ. 26

வடமராட்சி கிழக்கில் செயலற்றிருந்த பல கிராம அபிவிருத்திச் சங்கங்கள் அண்மையில் புனரமைக்கப்பட்டுள்ளன.

செம்பியன் பற்று தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, நாகர் கோவில் தெற்கு, குடத்தனை ஆகிய பகுதிகளிலேயே இவை புனரமைக்கப்பட்டுள்ளன.

ஏனைய பகுதிகளிலுள்ள சங்கங்களும் புனரமைக்கப்படுமென மருதங்கேணி பிரதேச செயலர் சி. பசுபதி தெரிவித்தார்

(இ-109)

## மாணவருக்கான 'மொடியூல்'

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். இந்து மகளிர் கல்லூரி நிலைய தேசிய கல்வி நிறுவக பட்டப் பின் கல்வி டிப்ளோமா 2 ஆம் வருட மாணவர்களுக்கான விசேட பாட 'மொடியூல்கள்' எதிர் வரும் சனிக்கிழமை வழங்கப் படவுள்ளன.

அன்றைய தினம் இந்து மகளிர் கல்லூரிக்கு சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் சமுகமளிக்குமாறு இந்து மகளிர் கல்லூரி பட்டதாரிப் பயிற்சி ஆசிரியர் அமைப்பினர் கேட்டுள்ளனர்.

இதேவேளை எதிர்வரும் டிசம்பர் 15 ஆம் திகதி நடைபெறவிருந்த முதலாம், இரண்டாம் மாணவர்களுக்கான பரீட்சைகள் எதிரவரும் பெப்ரவரி 15 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது.

(இ-4)

## தென்னங்கன்று விநியோகம்

மல்லாகம், நவ. 26

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் 45 தென்னம் கன்றுகள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 150 பயனாளிகளுக்கு இவை பகிர்ந்தளிக்கப்படும்.

இதற்கான பெயர்ப்பட்டியல் நல்லூர், அரியாலை, கோண்டாவில் பகுதி கிராம அலுவலர்களினால் வழங்கப் பட்டுள்ளது.

(இ-86)

# ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு சமூகக் கல்விப் பாட உதவிக் குறிப்புக்கள்

எஸ். கே. சுகுந்தன் (பி.ஏ.)

ஜி சீ. ஈ. சாதாரணதரப் பரீட்சையில் சமூகக்கல்விப் பாடத்தில் 40 சதவீதமானவர்களே சித்தி பெறுகின்றனர்.

ஏனையவர்கள் சாதாரண சித்தியே பெறுகிறார்கள். சிலர் சித்தி அடைவதில்லை.

இதற்குக் காரணம் இப் பாடப்பரப்பினை முழுமையாகக் கிரகித்துக் கொள்ளாமையே.

வரலாறும் சமூகக்கல்வியும் இணைந்ததான பாடப்பரப்பினை நோக்கும் போது ஆண்டு 6 முதல் ஜி. சீ. ஈ. (சாதாரணதரம்) வரையாக உள்ளது.

இதில் ஜி சீ. ஈ. (சாதாரண) பரீடசைக்கு ஆண்டு 9 முதல் ஆண்டு 11 வரையான பாடப் பரப்புகளிலேயே வினாக்கள் அமைகின்றன.

இந்தப் பாட அலகுடன் பொதுவான சர்வதேச நிகழ்வுகளையும் மையமாகக் கொண்ட வினாக்களும் இடம்பெறுகின்றன.

எனவே ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சையில் வரலாறும் சமூகக்கல்வியும் பாடத்தில் புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக சமூகக்கல்வியில் 60 சதவீத வினாக்களும் வரலாற்றில் 30 சதவீத வினாக்களும் படவேலைப் பயிற்சிகளை மையமாக வைத்து 10 சதவீத வினாக்களும் தனித்தனியே இடம் பெறுகின்றன,

இவற்றைப் பகுதி ரீதியாக ஆராய்வோம்.

பகுதி I

இதில் பல்தேர்வு வினாக்கள் காணப்படுகின்றன. இவற்றில்,

1. உலகதேசப்படம் (பொது)
2. இலங்கைப் படம்
3. ஏனைய பல்தேர்வு வினாக்கள்

என்ற ஒழுங்கு அமைப்பில் வினாக்கள் அமைகின்றன.

இவற்றுக்கு விடையளிக்கும் போது பின்வரும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

1. ஒவ்வொரு பகுதியில் இருந்தும் அறிவுறுத்தலின்படி சரியாக வினாக்களை தெரிவு செய்தல் வேண்டும்.

2. குறிப்பிட்ட நேரத்துக்கு ஏற்றதாக வினாக்களை முழுமையாக வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

3. உலகப் படத்துக்கான விடை அளிக்கும் போது இப் படம் குறித்து நிற்கும் சதுரங்களை அவதானித்து அவற்றின் பின்னணி அமைப்பை மனத்தில் கிரகித்துக் கொண்டு படத்தில் விடையை அறிதல் வேண்டும்.

4. இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி விடையளிக்கும் வினாக்கள் அடுத்ததாக அமையும். இவற்றுக்கு விடையளிக்கும் போது முதலில் எழுத்துக்கள் குறித்து நிற்கும் பகுதிகளை நன்கு அவதானித்து அவற்றின் பின்னணி அமைப்பை அறிந்து விடையளித்தல் வேண்டும்,

5. ஏனைய பல்தேர்வுப் பகுதிக்கு விடையளிக்கும் போது கேள்வியினை தெளிவுபட நிறுத்தி வாசித்து பிரதான காரணியை இனங்கண்டு இவற்றில் சரியாகப் பொருத்தமானது எது? சரியான அமைப்பு எது? ஒழுங்கு முறை போன்ற விடயங்கள் பல்வேறுவிதத்தில் அமையும். அவற்றிற்கு ஏற்றவாறு விடையளிக்கப்படல் வேண்டும்.

6. புள்ளடியினை இடுவதற்கு இயன்றளவு பென்சிலைப் பயன்படுத்தவும், இதன் மூலம் நேரம் மிதமாக இருக்குமிடத்து திரும்பத் தவறுகளை நிவர்த்தி செய்ய முடியும். இவ்வாறு பகுதி 1 இல் இடம்பெறும் 40 வினாக்களுக்கும் விடையளிக்க முடியும்.

பகுதி 11

1. படவேலை விடயங்கள்
2. வெற்றிடங்கள் நிரப்புதல்
3. அமைப்பு வினாக்கள்

இவற்றுக்கு விடை அளிக்கும் போது முதலில் கவனிக்க வேண்டிய விடயங்கள் படவேலைப் பகுதி ஆகும். இந்த படவேலைப் பயிற்சியின் அடிப்படை அம்சங்களுக்கு விடை அளிக்கும் போது சம உயரக் கோட்டுப் படத்தின் கீழ் வினாக்கள் இருப்பது கவனிக்கப்பட வேண்டும்.

இவ்வினாக்களுக்கு படத்திலேயே விடையளித்தல் வேண்டும். இவற்றில் தரைத் தோற்ற இயல்புகள இரண்டு விதமாக வினாக்களாகக் காணப்படும்.

அ பொருத்தமான இடங்களில் குறித்து எழுதுதல்.

ஆ. பொருத்தமான கோடுகளை வரைந்து கோடுகளின் மீது எழுதுதல்

(உதாரணமாக எ-பி என்னும் கோடுகள் மீது எழுதுதல்)

★ நிழற்படுத்தல்: படத்தின் உயரங்களை அவதானித்து [illegible] கபில நிறம் பயன்படுத்தப்படுகின்றது.

★ வீதிகள் அமைத்தல்:- பொருத்தமான நிறங்களைப் பயன்படுத்தி வீதிகள் அமைத்தல் (பிரதான வீதி சிவப்பு, அமைக்கப்பட்ட பிரதான வீதி, ஒழுங்கைகள், வண்டில்பாதைகள போன்றன) இவை பள்ளத்தாக்குகள், கணவாய்கள் ஊடாக வரையும் போது அதற்கு ஏற்றதாக வீதிகள் அமைத்தல் வேண்டும்.

★ நதிகள் அமைத்தல்:- இங்கு பிரதான நதி, கிளை நதிகள் ஆகியவற்றில் நதி செல்லும் திசை வளைவுகள் கிளை நதிகளை உருவாக்கல், பள்ளத்தாக்குகள் ஊடாகவும் நதிகள் வரையும் போது தரைத்தோற்ற அமைப்பைக் கருத்தில் கொள்ளுதல் வேண்டும் (பிரதான நதிகளுக்கு கடும் நீலமும் கிளை நதிகளுக்கு மெல்லிய நீலமும் பயன்படுத்தலாம்).

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஜி. சீ. ஈ. சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் நன்மை கருதி சமூகக்கல்விப் பாட உதவிக் குறிப்புகள் இங்கு பிரசுரமாகின்றன.

★ வழக்க குறியீடுகள்:- இங்கு அங்கீகரிக்கப்பட்ட வழக்கக் குறியீடுகளை மாத்திரம் பயன்படுத்த வேண்டும். சரியான எழுத்துக்களையும் நிறங்களையும் குறியீட்டு வடிவங்களையும் பொருத்தமான இடங்களில் இடப்படுதல் வேண்டும்.

★ எல்லைக் கோடுகள்;- மாகாணம், மாவட்டம். உதவி அரச அதிபர் பிரிவு, கிராமசேவகர் பிரிவு, நகர சபை இவைகளுக்கு எல்லைகள் அங்கீகரிக்கப்பட்ட குறியீடுகள் இடப்படுதல் வேண்டும்.

★ பரப்பளவைக்காணல்:- அளவுத்திட்டத்திற்கு அமைய அளந்து பரப்பளவைக் கணித்தல் வேண்டும். இவற்றினை விட கூறப்படும் கணித ரீதியில் காணப்படுதல் வேண்டும். இவற்றினைவிட பயிர்கள், பயிர்ச்செய்கை நிலங்கள், குளங்கள், கால்வாய்கள் போன்றனவும் உள்ளிட்டதாகவும் காணப்படும்.

பகுதி 2 இன் 1 ஆம் வினாவின் 3 ஆம் பகுதியில் சமவுயரக் கோட்டுப் படத்துக்கு கீழ் விடைஎழுதல். இங்கு பொது இயல்புகளை அடிப்படையாகவோ இலங்கையை உள்ளிட்டதாகவோ வினாக்கள் அமையும். 1990இல் காடழித்தல், 1991 இல் பொருளாதார ஆய்வு, 1992 இல் இலங்கை வரலாற்று முக்கியத்துவம், 1993 இல் இலங்கை வரலாற்று முக்கியங்கள், ஓவியங்கள், 1994 இல் வரலாற்று நிகழ்வுகள், 1995 இல் (விசேட பரீட்சை) இலங்கை இராசதானிகள், மத்தியகால ஐரோப்பிய நிகழ்வுகள் போன்ற அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. இத்துடன் வெற்றிடங்கள் நிரப்புதல் என்ற ரீதியில் இது சமூகக் கல்வி ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் இடம் பெறுவதுண்டு இலங்கையின் ஆரம்பகால அந்நியர்கள் வருகை குடியியல்களை உள்ளிட்டதாக அமைகின்றன.

பகுதி 2 இன் அடுத்த முக்கிய பகுதியாகக் காணப்படுவது அமைப்பு வினாக்கள். இந்தஅமைப்பு வினாக்கள் பாடத்திட்டத்தினை உள்ளடக்கிய பகுதிகளை மையமாகக் கொண்டவையாக அமையலாம். இவற்றில்,

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை வைத்தியசாலை

# வெளி நோயாளர் பிரிவு மல்லாகத்தில் இயங்கும்

சண்டிலிப்பாய், நவ. 26

இடம்பெயர்ந்து தற்போது மானிப்பாயில் இயங்கிவரும் தெல்லிப்பழை மாவட்ட அரசினர் வைத்திய சாலையின் வெளிநோயாளர் பிரிவை ஜனவரி மாதம் அளவில் மல்லாகத்தில் இயங்கவைப்பதற்கான முயற்சிகள் சுகாதாரப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கென மல்லாகத்தில் கட்டடம் ஒன்று தெரிவு செய்யப்பட்டு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (இ-135)

## வீடுபார்க்கசென்றோர் தாக்கப்பட்டனர்

வவுனியா, நவ. 26

ஓமந்தை கொந்தக்காரன் குளம், கோழியாகுளம் பகுதிகளில் சில தினங்களுக்கு முன்னர் வீடு பார்க்கச் சென்ற ஐந்து பொதுமக்கள் அப்பகுதியிலிருந்த படையினரால் நையப்புடைக்கப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)


## திருமண வைபவ இடம் மாற்றம்

27-11-97 வியாழக்கிழமை இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற இருந்த

**கங்காதரன் - கிருபாநிதி**

ஆகியோரது திருமணம்

தவிர்க்க முடியாத காரணத்தால் அதே தினம்

**மணமகள் இல்லத்தில்**

(பிள்ளையார் கோயிலடி, உடுவில் தெற்கு, மானிப்பாய்) நடைபெறும் என்பதை அறியத் தருகிறோம்.

மணமகன் / மணமகள்
குடும்பத்தினர்.

(51396)



## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து

**26 - 11 - 1997**



## செல்வி சி. செளமியா

நீர்வேலி மேற்கைச் சேர்ந்த

**சிவா- குலோசினி** தம்பதியரின்

**செல்வப் புதல்வி செளமியா**

26—11—97 இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை சுவிஸில் உள்ள சூரிச் என்னும் இடத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அவரை நீர்வேலியில் வசிக்கும் அம்மப்பா, அம்மம்மா, சீலன் மாமா, சிவா சித்தப்பா, ஜீவா சித்தி, அண்ணா பிரியன், மிருசுவில் சிவலோகம் பெரியம்மா, கைதடியில் வசிக்கும் அப்பம்மா, மாமா, மாமி, மச்சான் திரு, அதி, சிவா, இராஜ வீதியில் வசிக்கும் பெரிய தாத்தா, அம்மம்மா, உதயன் மாமா, ராசன் மாமா, (பவானி ஸ்ரோர்ஸ், நீர்வேலி, கஜமுகா ரேட் சென்ரர் K. K. S. வீதி, யாழ்ப்பாணம்), பெரிய மாமி, மச்சான் திபாகர், தீசன், மச்சாள் சுதர்சனா, சர்மினா, தவம் மாமா, அத்தை, துவாரகா, கினோஜன், குஞ்சித் தாத்தா, அம்மம்மா ஆகிய அனைவரும் மாசிவன் மீனாட்சி அம்மன் அருளால் செளமியாவை பல்கலையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

வாழ்த்துபவர்:
**V. V. செல்லத்துரை**
(அம்மப்பா)

நீர்வேலி மேற்கு,
மாசிவன்.

(சி/2159)


## ஜி.சீ.ஈ. சாதார...

(ஐந்தாம் பக்கத் தொடர்)

1. இலங்கைப் படத்தில் சில தரவுகளுடன் அமைப்பு வினாக்கள் அமைத்தல்.

உதாரணமாக, 16 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கை ஆரியர்கள் குடியேற்றங்கள், தலைநகரங்கள், இராசதானிகள், புராதன நீர்ப்பாசனம், ஐரோப்பிய இனத்தவர் ஆட்சி முறைகள் போன்றனஇடம்பெற்றுள்ளன

2. விளக்கப்படங்கள் தரப்பட்டு அமைப்பு வினாக்கள் அமைத்தல்.

உதாரணமாக, 1990 இல் வறுமையில் வாழும் குடும்ப பாரம்பரியம் நவீனதொழில் நுட்ப முறைகள் பற்றிய படங்கள் 1991 இல் சர்வாதிகாரம், ஜனநாயகம், யுத்த டாங்கிகள் போன்ற படங்கள் 1992 இல் விளம்பரம், சூழல் மாசடைதல், வீதி சட்டதிட்டங்கள் போன்ற படங்களும் 1993 இல் பண்டையகுளம், உலகப் போரின் நிகழ்வு போன்றனவும் 1994 இல் காடழித்தல் (மரங்களை அழித்தல்) தென்னாசிய நாடுகள், 1995 இல் உலகத் தேசிய படம் இலங்கை வரலாற்றில் ஆரம்ப காலப் பகுதிகள் போன்ற படங்கள் கொடுக்கப்பட்டு அவற்றினை மையமாகக் கொண்டு வினாக்கள் அமைந்தன. படத்தின் மூலம் வெளிக்கொணரப்படும் மையக்கருத்தை நீங்கள் பாடத்திட்டத்தில் படித்தவற்றுடன் தொடர்புபடுத்தி விடை எழுதுதல் வேண்டும்.

3. அபிவிருத்தி சம்பந்தமான வினாக்கள்.

அமைப்பு வினாக்களில் 3 வினாக்களும் வெவ்வேறு விவரங்களை அறியும் நோக்கில் ஒரே விடயம் பற்றியதாக அமையும். சில சமயங்களில் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் ஆண்டுகளில் கற்றவைகளுடன் தொடர்புபடுத்தியும் அமையலாம். வினாக்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படுதல் வேண்டும். அமைப்பு வினாக்களுக்கு விடையளிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

1. எல்லா வினாக்களையும் தெளிவு பெற வாசித்தல் வேண்டும். இதில் மிகச் சிறப்பாக விடையளிக்கக்கூடிய தென நீர் கருதும் படவேலை தவிர்ந்த 5 வினாக்களைத் தெரிந்து கொள்க. ஒவ்வொரு வினாக்களுக்கும் 30 நிமிடத்திற்கு மேல் செலவிடக் கூடாது. இந்த ஒவ்வொரு வினாக்களும் உப பகுதிகளைக் கொண்டவையாகக் காணப்படும்.

2. கேள்வியினை தெளிவுபட நிறுத்தி வாசித்தல்வேண்டும். உப பகுதிகளைக் கவனித்து விடையளித்தல் வேண்டும்.

3. விபரி. விளக்குக எனும் போது இயன்றளவு சுருக்கி முக்கிய தகவல்களை வழங்குதல் வேண்டும்.

4. கூற்றுக்களை ஒப்புக் கொள்வீரா என்று கேட்கப்படும் போது ஆம் அல்லது இல்லை என பதில் அளிப்பதோடு நியாயங்களையும் விளக்கமாகக் குறிப்பிடல் வேண்டும்.

5. காரணங்கள் கேட்கப்படும் போது குறிப்பு வடிவில் கொடுத்தல் வேண்டும். விடைகள் யாவற்றினையும் ஒன்று திரட்டி கொடுத்தல் கூடாது.

6. சில விடயங்களுக்கு இயன்றளவு புள்ளி விவரங்களை வழங்குதல் வேண்டும்.

உதாரணமாக சனத்தொகை, கைத்தொழில் போன்ற விடயங்களை கருத்தில் கொள்ளும் போது அதிக புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

இவ்வாறு வரலாறும் சமூகக் கல்வியும் பாடத்திட்டத்துக்கு விடையளிப்பதன் மூலம் அதிக புள்ளியைப் பெற்று அதி விசேட சித்தியையும் பெற்றுக் கொள்ள முடியும்.

இவ்வாறு பெறுவதற்காக நீங்கள் இப்போதே தயாரிப் [illegible] தரிகமீட்டல் பயிற்சிகளையும் பரீட்சை வழி காட்டல்களையும்பயின்றுபரீட்சை நோக்கில் வெற்றி அடைய முடியும். ★

## பாடசாலை மைதானத்தில் வெள்ளம்

நெல்லியடி, நவ. 26

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மைதானத்திலும், வாயிலிலும் வெள்ளம் தேங்கி நிற்பதால் இப் பாடசாலைக்கு வரும் மாணவிகளின் எண்ணிக்கை கடந்த சில நாள்களாகக் குறைந்து வருகிறது.

இதே வேளை இக் கல்லூரிக்குச் செல்லும் ஒரே பாதையான ஓடக்கரை வீதியும் படுமோசமான நிலையில் உள்ளது.

இப் பகுதியால் செல்வோர் அடிக்கடி விபத்துக்கு ஆளாகி வருகின்றார்கள். (இ-109)


## ஆசிரியர் ஒத்து இடமாறுதல்
**(Mutual Teacher Transfer)**

பேருவளை (மேல்மாகாணம்) முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றும் B.Com. ஆசிரியை தனது சொந்த இடமான சாவகச்சேரிக்கு வருவதற்கு விரும்புகின்றார். ஒத்து மாறுவதற்கு விரும்புவோர் பின்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்:-

**திரு. சி. வல்லிபுரநாதன்,**
(ஆசிரியர்)
**A647, இத்தியடி,**
வீரகத்திப் பிள்ளையார் கோயிலடி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

(51498)



## ஹட்டன் நஷனல் வங்கி
ஆதரவில்

## மாபெரும் கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

இடம்: **யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி.**

நாள்: **30 - 11 - 97** ஞாயிற்றுக்கிழமை

நேரம்: பிற்பகல் 2. 30 மணி.

1) பாடசாலைகளுக்கிடையிலான போட்டி

**யாழ். பரி. யோவான் கல்லூரி**
எதிர்
**யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி**

2) கழகங்களுக்கிடையிலான போட்டி

**யாழ். பல்கலைக்கழகம்**
எதிர்
**யாழ். பற்றீசியன் விளையாட்டுக்கழகம்**

பிரதம விருந்தினர்:- வண.பிதா A. I. பேர்ணாட்
(அதிபர், சம்பத்திரிசியார் கல்லூரி)

கூடைப்பந்தாட்ட இரசிகர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

## ஹட்டன் தேசிய வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

[சி/2149]



## 10 ஆம் வருட நினைவஞ்சலி

| மண்ணில்: | விண்ணில்: |
| --- | --- |
| 01 | 26 |
| 11 | 11 |
| 1916 | 1987 |



## கந்தையா பெரியதம்பி
(இளைப்பாறிய ஓவசியர் P. W. D.)

ஐயிரண்டு ஆண்டுகள் பறந்தோடிப் போனாலும்
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்

அன்பு மனைவி,
மக்கள், மருமக்கள், சகோதரி,
பேரப்பிள்ளைகள், உற்றார்,
உறவினர்கள்.

சிவமகால்
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/2178)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# உதயன்

## மொழியும் கீதமும்

இலங்கை மக்களில் 75 சத வீதத்துக்கும் அதிகமானோர் சிங்கள மக்கள். ஆகையால் சிங்களம் மட்டுமே நாட்டின் அரச மொழியாக இருக்கவேண்டும். நாட்டின் தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இலக் கருணாரத்னா வாதம் செய்திருக்கிறார்.

1956 ஆம் ஆண்டுக் காலப் பகுதிக்கு அவர் சென்றுள்ளார்! அப்போது இயற்றப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம்தான் நாட்டின் இன்றைய பிரச்சினைகளுக்கு எல்லாம் மூலகாரணமானது என்பதனை எல்லோரும் இப்போது ஏற்றுக்கொள்கிறார்கள். உண்மையும் அதுவே.

தனிச் சிங்களச் சட்டம் கொண்டு வந்த எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கவே நியாயமான தமிழ் மொழி உபயோகச் சட்டத்தையும் கொண்டு வந்தார்.

அதன் பின்னர் டட்லி சேனநாயக்கா காலத்தில், விசேட தமிழ் மொழிச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

எனினும் தமிழருக்கு சம அந்தஸ்து வேண்டும் என்ற தமிழ் மக்களின் கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை.

இருபத்தொரு வருடங்களின் பின்னர், ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் ஆட்சிக் காலத்தில், இலங்கை—இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தான பின்னர் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தில், தமிழும் நாட்டின் உத்தியோக மொழியாக இருக்க வகை செய்யப்பட்டது

அந்தச் சட்டம் முழு அளவில் நடைமுறைப்படுத்தப்படாமல் தமிழர்களின் மொழி உரிமை தொடர்ந்து பறிக்கப்பட்டு வருகிறது என்பதே தள நிலைமை. அரசாங்கத் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களில் இருந்து தமிழர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் நேற்று வரை தனிச் சிங்களத்திலேயே அனுப்பப்படுகின்றன!

தமிழர்கள் தமிழில் கடிதங்கள் எழுதினால் அவற்றுக்குப் பதில் கிடைப்பது மிக அரிது.

அரச திணைக்களங்கள், நிறுவனங்களில் போதிய தமிழ் தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர் இல்லாமையே இதற்குக் காரணமென்றும் —

அந்தக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆண்டாண்டு காலமாகக் கூறப்படுகிறதே அன்றி —

தமிழர்களுக்கு, அவர்களுக்குப் புரியாத மொழியான சிங்களத்திலேயே கடிதங்கள் இன்னமும் வந்துகொண்டிருக்கின்றன!

இது போதாமைக்கு சிங்களம் மட்டுமே ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்று ஐ. தே. க. உறுப்பினர் வாதாடுவது தமிழர்கள் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லர் என்று கூறுவதற்கு ஒப்பானதாகும்.

தேசிய கீதம் சிங்களத்தில் மட்டுமே இசைக்கப்பட வேண்டும் என்றும் — ஐ. தே. கட்சியின் எம். பி. வாதாடுகிறார். அப்படியானால் அதனை தமிழில் இயற்ற வேண்டிய தேவை இல்லையே! முது தமிழ் புலவர் மு. நல்லதம்பி தமிழில் பாடிய தேசிய கீதம் 1950களில் இசைக்கப்பட்டது.

அதாவது, தமிழர்கள் தமக்கென ஒரு தேசத்தைஉருவாக்கி அதற்கென தேசிய கீதம் இயற்றுவதோடு தமிழிலும் ஆட்சி நடத்த வேண்டும் என ஐ. தே. க. உறுப்பினர் விரும்புகிறார்.

அதுவே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமைய வேண்டும் என்று தமிழர்களும் விரும்புகிறார்கள்; விட்டுவிட வேண்டியது தானே!

## ஈரோஸ் பிரமுகர் கருத்து:

# தமிழரின் ஏக பிரதிநிதிகள் புலிகளே என்ற நிலை உருவாகி வருகிறது

## ஏனைய அமைப்புக்கள் ஒதுங்கும் நேரம் வந்துவிட்டது

யாழ்ப்பாணம் நவ 26

''தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு ஏனைய தமிழ் அமைப்புகள் விலகிக்கொள்ள வேண்டிய நிலை உருவாகி உள்ளது.

'ஜனநாயக வழிக்குத்திரும்பிய எமது அமைப்பு உட்பட எந்தஒரு தமிழ் அமைப்பினாலும் இதுவரை எதனையும் சாதிக்க முடியவில்லை. அரசியல் கட்சியாக பதிவு செய்து 10 வருடங்கள் ஆகின்றன. நான்கு ஜனாதிபதிகளைக் கண்டுவிட்டோம். ஆனால், தமிழர் துயரங்களுக்கு தமிழ்க் கட்சிகளால் எதுவித தீர்வையும் வழங்க முடியவில்லை. எனவே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயமான ஒன்றாகவே அமைகிறது,.

ஈரோஸ் முக்கியஸ்தர் சுதா மாஸ்டர் அரசின் அரசியல் தீர்வு தொடர்பாக கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

தமிழ் அமைப்புக்களைச் சேர்ந்த 17 எம்.பிக்கள் நாடாளுமன்றத்தில் உள்ளனர். இவர்களால் தமிழர் பிரச்சினைக்கு என்ன தீர்வைத் தரமுடிந்தது? அல்லது தீர்வை நோக்கி அரசாங்கத்தை என்ன வகையில் இட்டுச் செல்ல முடிந்தது?

வடக்கு — கிழக்கு அலகு விடயத்தில் கூட அரசாங்கத்தின் போக்கினை அவர்களால் மாற்ற முடியவில்லை.

அரசியல் நீரோட்டத்துக்குத் திரும்பிய தமிழ் அமைப்புகள் தமது பாதுகாப்புக்கென ஆயுதங்களையும் வைத்துள்ளன. சில அமைப்புக்கள் இராணுவத்துடன் இணைந்து செயற்படுகின்றன. இதனால் கண்ட பலன் தான் என்ன? இன்னும் எவ்வளவு காலம் இப்படி தமிழ் அமைப்புகள் காலத்தைக் கழிக்கப் போகின்றன? இறுதியில் இது ஒரு வரலாற்றுத் துரோகமாகவே அமையும் என்பதை வேதனையுடன் கூறவேண்டியுள்ளது.

தமிழர்கள் கண்டபடி கைதுசெய்யப்படுகின்றனர். மனித உரிமை மீறல்கள் தாராளமாக இடம் பெறுகின்றன.

ஆனால் எமது தமிழ் அமைப்புகளால் இதுவரை எதுவித உருப்படியான நடவடிக்கையையும் செயற்படுத்த முடியவில்லை.

இது போன்ற அனைத்து பின்னடைவுகளுக்கும் காரணம் தமிழ் அமைப்புகளிடையே ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையே. அனைத்துத் தமிழ் அமைப்புகளும் ஒன்றிணைந்து தமிழ் மக்களின் துயரங்களுக்கு ஒரு முடிவு காண முடியாது விட்டால் விடுதலைப்புலிகளே தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக் கொண்டு விலகிக் கொள்ளவேண்டியது தான்.

ஏனெனில் ஏற்கனவே எமது தமிழ் அமைப்புகளின் குளறுபடிகள் தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் என்பதைப் பகிரங்கமாக வெளிப்படுத்தி வருகிறது.

உறுதித் தன்மையையும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் வல்லமையையும் படிப்படியாக இழந்துவரும் இத்தமிழ் அமைப்புக்கள் தம்மை மறு பரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய கட்டாயத்தில் உள்ளன.

இதுவரை என்ன செய்துள்ளோம்? இனி என்ன செய்ய இருக்கின்றோம்? என்பது குறித்து இவை ஆராய வேண்டும், எதுவுமே செய்ய முடியாது என்று தோன்றுமானால் இதய சுத்தியுடன் விடுதலைப் புலிகளின் போராட்டத்துக்கு தடையாக இல்லாது விலகிக் கொள்வதே பொருத்தமாக இருக்கும் இது தான் காலத்தின் தேவையாகவும் அமையும்.

இப்படி அவர் கூறினார்.

(இ-ரி)

## பரீட்சை

யாழ்ப்பாணம், நவ. 26

ஸ்ரீ லங்கா வெளிநாட்டு சேவைக்கு ஆள்சேர்ப்பதற்கான பரீட்சை எதிர்வரும் 29 ஆம், 30 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பரீட்சை இரு தினங்களிலும் காலை 9-00 மணிக்கு ஆரம்பமாகும். பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் நேற்று முன் தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் யாழ். கல்வி வலயம் 1 உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை நடத்துவதற்கான ஏற்பாடுகளை யாழ். சிவில் நிர்வாக பிரதம இணைப்பாளர் பிரிகேடியர் திலகரட்ண மேற்கொண்டிருந்தார். (உ-5)

## அதிபர்கள் கூட்டம்

குருநகர், நவ 26

யாழ்ப்பாணம், நல்லூர் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் எதிர்வரும்வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் யாழ்., நல்லூர் கல்விக் கோட்டங்களின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் வ. தானையா தலைமையில் நடைபெற உள்ளது. (உ-51)

## சுகாதாரப் பரிசோதகர் பயிற்சிக்கு தெரிவானோர்

யாழ்ப்பாணம், நவ. 26

சுகாதாரத் திணைக்களத்தின் இடைநிலை சேவைப் பயிற்சிநெறிகளில் ஒன்றான பொதுசன சுகாதார பரிசோதகர் பயிற்சிநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட 23 பேருக்கான நியமனக்கடிதங்கள் யாழ். சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப்பணிப்பாளர் பணிமனைக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ். சுகாதார சேவைகள் பதில் மாகாணபிரதிப் பணிப்பாளர் டாக்டர் கே. ரி. சிவபாதம் அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக்கடிதங்களை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் தமது அடையாள அட்டைகளைக் காண்பித்து பெற்றுக் கொள்ளுமாறும்—

இன்னும் 25 பேருக்கான நியமனக் கடிதங்கள் கொழும்பிலிருந்து எதிர்பார்க்கப்படுவதாகவும்—

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நியமனக் கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ள 23 பேரினதும் பெயர் விவரங்கள் வருமாறு:-

எஸ். சௌந்தரராசா (சாவகச்சேரி), வி. ரதீசன் (கரவெட்டி), வை. தயாமோகன் (வெள்ளவத்தை), எஸ், கே. அருந்தவராசா (பருத்தித்துறை), டி. ரகுலீசன் (மீசாலை),

பி. சிவகுமார் (சாவகச்சேரி), என். கஜேந்திரன் (சாவகச்சேரி), பி. பாலதேவா (பருத்தித்துறை), எம். சிறிதரன் (சாவகச்சேரி) பி. புவனம் (கரவெட்டி),

கே. குமாரதாசன் (தும்பளை), எஸ். முரளிகரன் (யாழ்ப்பாணம்), எஸ். தயாபரன் (அச்சுவேலி), கே. முருகதாஸ் (ஆனைக்கோட்டை), கே. சிவனேசகுமார் (கைதடி)

பி. சிவரூபன் (சுழிபுரம்),

எம். சிறீனேஸ்வரன் (நீர்வேலி), பி. தயாளன் (நல்லூர் வடக்கு), சி. நாகேந்திரன் (புலோலி), என். அருள்மாறன் (வட்டுக்கோட்டை),

எஸ். பரமேஸ்வரன் (யாழ்ப்பாணம்), எம். சிவசுப்பிரமணியம் (சங்கானை), ஆர். ஈஸ்வரன் (பருத்தித்துறை).

(உ-5)

## இடைநிலை மருத்துவ சேவை; பயிற்சி நெறி கொழும்பில்

யாழ்ப்பாணம், நவ. 26

சுகாதாரத் திணைக்களத்தின் இடைநிலை மருத்துவ சேவைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் டிசம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் கொழும்பு சென்று இதற்கான பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள முடியும்.

இத்தகவலை யாழ். போதனா வைத்தியசாலையின் நிர்வாக உத்தியோகத்தர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இப் பயிற்சி நெறிகளில் கலந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அழைப்புக் கடிதங்கள் தாமதமாகவே கிடைக்கப் பெற்றதால் உடனடியாக கொழும்பு செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

பயிற்சி நெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒரு தொகுதியினருக்கான நியமனக்கடிதங்கள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் —

ஏனையோருக்கான நியமனக் கடிதங்களும் கொழும்பில் இருந்து கிடைக்கப் பெற்றதும் உரியவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் — அவர் மேலும் தெரிவித்தார்.

பொது சுகாதார பரிசோதகர் பயிற்சி நெறிகள் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார உதவிப் பணிப்பாளர் காரியாலயத்தில் நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

(உ-5-9)

## எக்ஸ்ரே கருவியை பொருத்த நிபுணர் வருவர்

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். போதனா வைத்தியசாலையில் பல மாதங்களாக இயங்காமலிருந்த எக்ஸ்ரே கருவியை விரைவில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இக்கருவியை உரிய முறையில் பொருத்தி இயங்க வைப்பதற்காக எதிர்வரும் முதலாம் திகதி ஜேர்மன் நிபுணர்களும், இலங்கைப் பொறியியலாளர்களும் யாழ். வருகை தரவுள்ளனர்.

இந்த எக்ஸ்ரே கருவி ஜேர்மன் உதவித்திட்டத்தின் கீழ் யாழ். போதனா வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்தது.

ஜேர்மன் நிபுணர்களின் உதவியின்றி இக்கருவியை செயற்படுத்த முடியாத நிலை இருந்தது தெரிந்ததே.

### நாளை

**கார்த்திகை 12**

வியாழக்கிழமை

திதி: திரயோதசி

முழு நாளும்

நட்சத்திரம்: சித்திரை

முற்பகல் 8.52 வரை.

பிரதோஷ விரதம்

சுபநேரம்: 7.42-9.12

ராகுகாலம்: 1.42-3.12

(பகலுக்கும் இரவுக்கும் வழமை நேரப்படி)

## சுயதொழில் பயிற்சிக்கு மகளிர் தெரிவாவர்

யாழ்ப்பாணம், நவ. 26

வேலையற்றிருக்கும் மகளிருக்கு சுயதொழில் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்குடன் 10 நாள்கள் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் 180 மகளிர் தெரிவு செய்யப்படவிருக்கின்றனர்.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படவிருக்கும் இப்பயிற்சி நெறிக்கு மகளிரைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைகள் கடந்த இரு தினங்களாக யாழ். செயலகத்தில் நடைபெற்றன.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருந்த மகளிரைத் தெரிவு செய்யும் நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் முதலாம், ஐந்தாம் திகதிகளுக்கு பிற்போடப்பட்டுள்ளன என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாளை சமுகமளிக்கவிருந்த... பட்டவர்களுக்கு முதலாம் திகதியும், ஏனையோருக்கு 5 ஆம் திகதியும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறும் என்று கைத்தொழில் அபிவிருத்திச் சபை வடமாகாண முகாமையாளர் மீ. கனகசபை தெரிவித்துள்ளார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண தரப் பரீட்சை ஏற்பாடுகள் பூர்த்தி!

கொழும்பு, நவ. 26

எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தியாகியுள்ளதாக பரீட்சை திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பரீட்சையில் 5 லட்சத்து 87 ஆயிரத்து 438 மாணவர் தோற்றுகிறார்கள். இவர்களில் மூன்று லட்சத்து 91 ஆயிரத்து 824 பேர் பாடசாலைகளில் இருந்தும், ஒரு லட்சத்து 95 ஆயிரத்து 614 பேர் தனிப்பட்ட முறையிலும் தோற்றுகின்றனர்.

நாடுமுழுவதும் அமைக்கப்படும் 4 ஆயிரத்து 36 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் 143 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறும்.

அதேநேரம்—

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு வினாத்தாள்கள் எடுத்துச் செல்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய எதிர்வரும் முதலாம் திகதி பாதுகாப்பு அமைச்சில் கூட்டம் ஒன்று நடைபெறவிருக்கிறது. (உ-3)

# யாழ்ப்பாணத்துக்கு மிக விரைவில் வயர்லெஸ் தொலைபேசி வசதி

யாழ்ப்பாணம், நவ. 26

குடாநாட்டில் இருப்போர் வெளியிடங்களுடன் தொடர்பு கொள்ள வசதியாக வீடுகளுக்கு கம்பி மூல இணைப்புகளற்ற ('வயர் லெஸ்') தொலைபேசி வசதி விரைவில் வழங்கப்படவிருக்கின்றது.

அமெரிக்க நிறுவனமான மோட்டோ றோலா நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்தத்தொலைபேசிச் சேவைக்கான உபகரணங்கள் கப்பல் மூலம் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்பட்டுள்ளன.

இந்த நிறுவனத்தின் அதிகாரிகள் விரைவில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவிருக்கின்றனர்.

இந்த சேவைக்கான இணைப்பு நிலையம், அன்ரனா பொருத்துதல் போன்ற பணிகளை அவர்கள் மேற்கொள்வர்.

அதன் பின்னர் பொதுமக்களுக்கு சேவை வழங்கப்படும்.

தற்சமயம் செயற்படும் ரெலிக்கொம் நிறுவன இணைப்புக்கு புறம்பாகஇந்த சேவை வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையத்திலிருந்து இந்த தொலைபேசிகள் 'வயர்கள்' மூலம் தொடர்புபட்டிருக்க மாட்டா.

அதற்கு மறாக —

இந்த இணைப்பு வழியைப் பெறுவோரின் இடங்களில் அன்ரனா ஒன்று பொருத்தப்படும். அந்த அன்ரனாவுடன் 'வயர்' மூலம் இணைக்கப்பட்ட தொலைபேசி அவருக்கு வழங்கப்படும். இந்தத் தொலைபேசி மூலம் வெளியூருடனும், வெளிநாடுகளுடனும் அவர் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## சடலம் ஒப்படைப்பு

வவுனியா, நவ. 26

வவுனியா கூமாங்குளம் பகுதியில் புளொட் அமைப்புக்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடந்தமோதல் சம்பவத்தில் உயிரிழந்த விடுதலைப்புலி உறுப்பினர் கப்டன் திருமாவளவனின் சடலம் நேற்று வன்னியில் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இவரின் மரணம் தொடர்பாக வவுனியா திடீர் மரண விசாரணை அதிகாரி சிவநாதன் கிஷோர் மரண விசாரணை நடத்தியதையடுத்து சடலம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-164-3)

# வீட்டிலிருந்த பெண்ணை காயப்படுத்திய திருடர்கள்

அதிகாலைவேளை வீடு ஒன்றினுள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த இளம்பெண் ஒருவரைக் காயப்படுத்திவிட்டு, பெறுமதிமிக்க 'டெக்' ஒன்றினை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த சனியன்று யாழ்ப்பாணம், இராசாவின் தோட்டம் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் காயமடைந்த செறின் அரசக்கோன் (வயது 21) என்ற பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

பிரஸ்தாப பெண்ணின் பெற்றோர் கொழும்பு சென்றிருந்ததால் அயலிலுள்ள பெண் ஒருவரின் துணையுடன் அவர் உறங்கிக்கொண்டிருந்தார். அவ்வேளை வீட்டின் ஓடுகளை கழற்றி விட்டு வீட்டுக்குள் புகுந்த திருடர்களில் ஒருவர், அப்பெண்ணின் வாயைப் பொத்த முயன்றபோது பொத்தியவரின் கைவிரல் பெண்ணின் வாய்க்குள் அகப்பட்டு விட்டது. அப்பெண் உடனே விரலை 'நறுக்' என்றுகடித்துவிடவே துடிதுடித்துப்போன திருடர் அவசரமாக கையை இழுத்தபோது பெண்ணின் பல் ஒன்றும் கழன்று விட்டது. முகத்திலும் நகக்கீறல்கள் ஏற்பட்டன இதனைத் தொடர்ந்து அப்பெண் கூச்சலிடவே கையில் அகப்பட்ட 'டெக்' ஒன்றை எடுத்துக் கொண்டு திருடர்கள் ஓட்டம் பிடித்தனராம். (உ-5)

## விமானப்படை ..

(முதலாம் பக்கத் தொடர்)

பாதுகாப்பான வான் சேவைக்கு ஸ்ரீலங்கா விமானப்படை இப்போதைய நிலையில் 'பெல் 212' ரக ஹெலிகளையும், 'எம். ஐ. 17' ரக ஹெலிகளையுமே பெரிதும் தங்கியிருந்தது. அதில் ஒன்றான 'பெல்' ரக ஹெலி மர்மமான முறையில் நள்ளிரவில் வீழ்ந்து நொறுங்கியிருப்பதை அடுத்து அந்த ரக ஹெலிகளின் பாதுப்பான சேவை குறித்தும் கேள்விகள் கிளம்பியிருக்கின்றன.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை. இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோகான் தளுவத்த, பொலீஸ் மா அதிபர் டபிள்யூ இராஜகுரு ஆகியோர் பயணம் செய்த சமயம் இடைவழியில் பழுதுபட்டு வன்னிப்பகுதியில் தரையிறக்கப்பட்டு, பின்னர் கைவிடப்பட்டு அழிக்கப்பட்ட ஹெலிக்கொப்டரும் 'பெல் 212' ரகத்தைச் சேர்ந்ததே என்று சுட்டிக்காட்டப் படுகின்றது.

நேற்று அதிகாலை வீழ்ந்து நொறுங்கிய ஹெலியில் ஏவுகணை எதிர்ப்பு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்ததாகக்கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த ஹெலியின் முற்பகுதியே எரிந்து கடும் சேதத்துக்கு உள்ளாகியிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-21-164)

# ஆயுள்வேத வைத்தியர்களுக்கு அபின் வழங்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ. 26

யாழ். மாவட்டத்தில் அரசாங்க அனுமதி பெற்று சித்த வைத்திய சேவையை வழங்கிவரும் ஆயுள்வேத வைத்தியர்களுக்கு வைத்திய உபயோகத்தின் பொருட்டு ''அபின்'' வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அபின் உபயோகிப்பதற்குரிய லைசென்ஸ் வைத்திருக்கும் வைத்தியர்கள் தமது பெயர் விவரங்களை இன்று காலை முதல் யாழ். செயலகத்தில் வந்து பதிவு செய்து கொள்ளுமாறு யாழ் பிரதேச செயலரும், மேலதிக அரசாங்க அதிபருமான து. வைத்திலிங்கம் தெரிவித்தார். (இ-ரி)

## அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் உதவி

திருநெல்வேலி, நவ. 26

எழுதுமட்டுவாள் கிராமத்திலுள்ள உழைப்பாளிகளை இழந்த மாதர் சங்கத்துக்கு அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் 43 ஆயிரம் ரூபாவை கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது.

கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு ஆகியவற்றுக்கு இப்பணம் கடனாக வழங்கப்படும். (இ-135)

## ஆளுநராக ரங்கராஜன்

இந்திய றிசேவ் வங்கியின் முன்னாள் கவர்னர் சே.ரங்கராஜன் ஆந்திர ஆளுநராக நேற்று முன்தினம் பதவி ஏற்றார்.

ஹைதரபாத்தில் ஆளுநர் மாளிகையில் நடந்த ஒரு நிகழ்ச்சியில் அவருக்கு மாநில உயர் நீதிமன்ற தற்காலிக தலைமை நீதிபதி சயூப் முகமது ஸாகுதாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## இந்த...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்வதற்கு அனுமதி பெற்றவர்களில் — இலக்கம் 571 முதல் 606 வரையான பட்டியல்களில் பெயர் உள்ளவர்கள் — தமது பதிவுகளை இன்று முதல் மேற்கொள்ளலாம் என்று அந்த அலுவலகம் அறிவித்துள்ளது.

தற்சமயம் காங்கேசன் துறையில் பொருள் இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ''லங்கா முடித''. கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கி முடித்ததும், இக் கப்பல் பயணிகள் சேவைக்கு பயன்படுத்தப்படவிருப்பது தெரிந்ததே.

இக் கப்பலில் 700 பயணிகள் பயணம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (உ-3)

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்)

செல்வதற்காக அப்பகுதிக்கு அம்புலன்ஸ் ஒன்று நேற்றிரவு விரைந்து சென்றதாக வவுனியா செய்திகள் தெரிவித்தன. (உ-164)

## மோதலில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். அங்கிருந்து ஊர்காவற்றுறையில் உள்ள ஈ.பி.டி. பியின் இராணுவத் தலைமையகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மக்களினதும் கட்சி உறுப்பினர்களதும் அஞ்சலிக்கு வைத்த பின்னர் முழு இராணுவ மரியாதைகளுடன் நல்லடக்கம் செய்யப்படும் என்று ஈ. பி. டி. பி. வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## கொக்குவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

அங்கு வைத்து சகலரும் அடையாள அட்டைகள் சோதிக்கப்பட்டு பிற்பகல் 1.45 மணியளவில் விடுவிக்கப்பட்டனர்.

கொட்டும் மழையிலும் மக்கள் வரிசையில் நின்றதாகத் தெரியவந்தது

பஸ் நிலையத்துக்கு வந்த சகல பஸ்களும் நண்பகலுக்கு பின்னரே பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டன.

கொக்குவிலில்

கொக்குவில், கோண்டாவில் கிழக்கு, காரைக்கால் பகுதிகளும் நேற்றுக்காலை படையினரால் சுற்றிவளைக்கப்பட்டன.

அப்பகுதியில் வீடுவீடாகத் தேடுதலில் ஈடுபட்ட படையினர் நண்பகலின் பின்னர் கே. கே. எஸ். வீதியில் சென்றவர்களை பல இடங்களில் தடுத்து வைத்து விசாரணை செய்தனர்.

நாச்சிமார் கோயிலடி, கொக்குவில் சந்திப் பகுதிகளில் மக்கள் தடுத்து வைக்கப்பட்டு மாலை வரை விசாரிக்கப்பட்டனர்.

இதன் காரணமாக அப்பகுதியில் நேற்று வழமை நிலை பாதிக்கப்பட்டிருந்தது. (உ-3-117-86)

## புளியங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்)

புரம் தளத்திலிருந்து புறப்பட்டன.

நயினாமடு, மதியாமடுப் பகுதிகளை நெருங்கிய சமயம் சம்பந்தப்பட்ட 'பெல்' ஹெலியின் விமானி கால நிலை சீரில்லாத காரணத்தால் ஹெலியின் பறப்பு உயரத்தை ஆயிரம் அடிக்கு மேலிருந்து ஐந்நூறு அடி வரை இறக்கியதாக விமானப் படைத் தளத்துக்கு தகவல் அனுப்பியதாகவும் —

சற்றுப் பின்னர் ஹெலியுடனான தொடர்பு இழக்கப்பட்டுவிட்டதாகவும் —

பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

ஆனால் ஹெலி வீழ்ந்ததற்கான காரணம் குறித்து சுதந்திரமான செய்திகள் ஏதும் வெளியாகவில்லை.

வெடித்துத் தீப்பிழம்பாக இந்தக் ஹெலி வீழ்ந்ததாகவும் —

விடுதலைப் புலிகளின் ஏவுகணைத்தாக்குதலுக்குஹெலி சிக்கியிருக்கக் கூடும் எனவும் —

கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஹெலி எரிந்து வீழ்ந்ததை யுத்தமுனையிலிருந்த படையினர் கண்டதாக ஒரு செய்தி தெரிவித்தது.

உடனடியாகத் தேடுதல் நடவடிக்கையை ஆரம்பித்த படையினர் புளியங்குளத்துக்கு கிழக்கே பழையவாடி பிரதேசத்தில் இருந்து விபத்துக்குள்ளான ஹெலிக்கொப்டரைக் கண்டுபிடித்தனர்.

ஹெலியின் விமானிகளான பிளைட் லெப்டினன்ட் லுசாந் எதிரிசிங்க, பிளைட் லெப்டினன்ட் உதல் தென்னக்கோன், சுடுபடைச் சிப்பாய்களான கே. வி. கே. பிரேமதிலக, பிளைட் சார்ஜண்ட் ஏ. வி. சமரசிங்க ஆகியோரின் சடலங்களும் மீட்கப்பட்டன. (உ-3-21-5-164)


உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புகளை
எந்நேரமும் யாழ்நகரில் பெறுவதற்கு
**மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு)
(சி/2160)


## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி தணிகாசலம்

(ஆவரங்கால்)

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், ஆவரங்காலை வாழிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி தணிகாசலம் அவர்கள் சென்னை அண்ணாநகரில் 24 - 11 - 97 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற முத்தையா தணிகாசலத்தின் அன்புப் பாரியாரும், காலஞ்சென்ற பொன்னையா - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் பாலசுப்பிரமணியம் (U K.), லோகேஸ்வரன் (கொழும்பு), காலஞ்சென்ற தியாகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், Dr. ரஞ்சிதராணி (U K.), Dr. பானுமதி (U.K.), ஸ்ரீஸ்கந்தராஜா (இந்தியா), அனுசூயா (உசன்), Dr. காந்திமதி (U K.), யுருகானந்தன் (U.K.), சக்திவேல் (U.K.), Dr. மனோகரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமாரகுலசிங்கம் (U.K.), கணபதிப்பிள்ளை (U.K.), கலாவதி (India), தயானந்தன் (உசன்), துரைசிங்கம் (U.K.), ரூபமதி (U.K.), உமாகரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ராம்குமார், மீரா, ரவி, ரகு, லக்ஸ்மணன், மதுராந்தகன், தர்ஷிகா, அம்பிகா, உஷா, சாய்மாலஷ்மி, சாய்மாஜனனி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவர்,

அன்னாரின் இறுதிக் கிரியைகள் சென்னை அண்ணா நகரில் நடைபெற்றன.

தகவல்;

திருமதி க. அனுசியா (மகள்)

உசன்,
மிருசுவில். (51403)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org